**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, VANDAVASI.**

| | | |
|---|---|---|
| Case No | : | அ.வ.எண். 34/2011 |
| Deposition of Witness for | : | வா.த.சா.. . 1 |
| Name | : | தயாளன் |
| Father's/Husband's Name | : | நாராயணசாமி |
| Village and Taluk | : | திரக்கோயில் கிராமம், வந்தவாசி |
| Caste | : | -- |
| Nationality | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 69 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 28.02.2019 வா.த.சா..1

**முதல் விசாரணை தொடர்ச்சி,**

சாட்சி சத்யபிரமானம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார். இந்த வழக்கில் நான் வாதியாவேன். நான் வா.த.சா.1 ஆக சாட்சி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவைதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். வாதிக்கு ஒதுக்கிய தாவா சொத்து சம்பந்தமமாக வாதியின் தந்தை நாராயணசாமி பிள்ளை த/பெ.கோபால்சாமி பிள்ளை பெயரில் உள்ள பட்டா புத்தகம் அசல் வா.த.சா.ஆ.4 ஆகும். 08.06.1998 தேதியிட்ட வாதி மற்றும் அவரது சகோதாரர்கள் கூட்டாக சேர்ந்து மோகன் குமாரர்கள் அரிகிஸ்ணன், வினாயகமூர்த்தி ஆகியோர்களுக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் சான்னிற்ற நகல் வா.த.சா.ஆ.5 ஆகும். 25.0.1999தேதியிட்ட வாதியின் மூத்த சகோதரர் ரங்கநாதன் தனக்கு வந்த பாகத்தை ராமகவுண்டர் த/பெ. கிருஷ்டகவுண்டர் என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் வா.த.சா.ஆ.6 ஆகம். 19.07.2010 தேதியிட்ட வாதியின் இளைய சகோதரர் ராஜாராம் தனக்கு வந்த பாக சொத்தை தன் மனைவி விஜயாவுக்கு எழுதி வைத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.7 ஆகும். 22.02.2013 தேதியிட்ட தாவா சொத்திற்கான கனிணி பட்டா வா.த.சா.ஆ.8 ஆகும். 14.09.2018 தேதியிட்ட தாவா சொத்திற்கான கனிணி பட்டா வா.த.சா.ஆ.9 ஆகும். வாதி பட்டா மாற்றம் செய்ய கோரி மாவட்ட ஆட்சியருக்க அனுப்பிய கடிததத்திற்கு பதில் வா.த.சா.ஆ.10 ஆகும். தாவா சொத்திற்கு வாதியின் தந்தை பெயரில் உள்ள 1390 க்கான சிட்டா வா.த.சா.ஆ.11 ஆகும்.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க அணைத்து ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஆட்சேபனை தெரவிக்கப்படுகிறது. குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**